8th August 1966]

*** 231 கேள்வி.—திரு. எம் .எஸ் செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்துக்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் செய்யும் திட்டங்கள் எந்நிலையில் உள்ளன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்பாசமுத்திரம் பஞ்சாயத்திற்கு நீர்வழங்கும் திட்டத்திற்காக பொதுநலப் பொறியியல்—நகராட்சிப் பணிகள்துறை தலைமைப் பொறியாளரிடமிருந்து புலனாய்வு மதிப்பீடு Investigation Estimate எதிர்பார்க்கப்படுகிறது.

விக்கிரமசிங்கபுரத்திற்கு நீர் வழங்கும் திட்டத்திற்காக தலைமைப் பொறியாளர் முன்னோடிச் செயற்குறிப்புகளை out line proposals அனுப்பியுள்ளார். அச்செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இரண்டு பகுதிகளுக்கும் உத்தேசமான எஸ்டிமேட் எவ்வளவு? தொழிலாளர்கள் நிறைந்த பகுதி என்ற நிலையைக் காரணமாக வைத்தாவது அவற்றிற்கு முன் பாத்தியதை வழங்கி இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த கம்பைன்ட் வாட்டர் சப்ளை ஸ்கீம் இன்ஸ்டால் செய்ய 31.93 லட்சம் ரூபாய் செலவாகும். விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்துக்கு 26.45 லட்சம் ரூபாய், செவந்திபுரம் பஞ்சாயத்துக்கு 5.48 லட்சம் ரூபாய் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது எஸ்டிமேட்டில்.

*** 232 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகராண்மைக் கழகம் 11-4-1966-ல் அடிக்கல் நாட்டிய, மேல்மட்ட குடிநீர் தேக்கத் தொட்டியின் மதிப்பீட்டுத் தொகை என்ன ?

(இ) அதை எந்த இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) The estimated cost of the proposed Service Reservoir of 1,25,000 gallons capacity is Rs. 1,45,000.

(*b*) It is proposed to construct the Service Reservoir at the site of the old park near the junction of Mosur Road and Gandhi Road, according to the outline proposals. However, the exact site will be decided at the time of preparing detailed estimates.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த எஸ்டிமேட்டில் அரக்கோணம் தண்ணீர் சப்ளை பிரச்னை பூராவாக தீர்க்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஓரளவு பூர்த்தி செய்வதற்காகத்தான் இந்த எஸ்டிமேட் போட்டிருக்கிறோம். நடைமுறையில் வரும்போதுதான் குறிப்பாகக் கூற முடியும்.